# தனியுரிமைக் கொள்கை

*Disclaimer: In the event of any discrepancy or conflict in the translated version, the English version will prevail over the translation.*

www.paisabazaar.com மற்றும் “கைப்பேசி செயலி” ஆகிய ஆன்லைன் தளங்களை (ஒட்டுமொத்தமாக “இணையதளம்”) உள்ளடக்கிய பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் (”பைசாபஜார்”/”நிறுவனம்”/” Paisabazaar.com”) உங்களுடைய தனியுரிமையைப் பேணுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளது. தனது பயனர்களுடைய அனைத்துத் தகவல்களின் இரகசியத்தன்மை, கட்டுறுதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு Paisabazaar.com உறுதிப்பாடு கொண்டுள்ளது. தேவையின் அடிப்படையில் இணையதளத்தைப் பயன்படுத்துவதன் மூலம் உங்களிடமிருந்து பெறப்படும் தகவல்களை இந்தத் தனியுரிமைக் கொள்கையானது Paisabazaar.com எவ்வாறு சேகரிக்கிறது, சேமிக்கிறது, கையாள்கிறது மற்றும் அனுப்புகிறது என்பதை இந்தத் தனியுரிமைக் கொள்கை விளக்குகிறது. இந்தத் தனியுரிமைக் கொள்கையானது எங்களுடைய இணையதளத்துக்கு வரும் பார்வையாளர்கள், எங்களுடைய தற்போதைய மற்றும் எதிர்கால வாடிக்கையாளர்களுக்குப் பொருந்தும். எங்களது இணைய தளத்தைப் பார்வையிடுவது மற்றும்/அல்லது பயன்படுத்துவதன் மூலம் நீங்கள் இந்தத் தனியுரிமைக் கொள்கையில் விளக்கப்பட்டுள்ள நடைமுறைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஒப்புதல் தருகிறீர்கள்.

இந்த இணையதளத்தைப் பயன்படுத்துவது அல்லது பயன்படுத்தத் தொடர்வதன் மூலம், பைசாபஜார் நிறுவனத்தால் தனது தனிப்பட்ட விருப்புரிமையின்படி அவ்வப்போது திருத்தப்படும் தனியுரிமைக் கொள்கையின்படி, உங்களுடைய தகவல்களை (தகவல் தொழில்நுட்பச் சட்டம் 2000, பொருத்தமான விதிகள், அறிவிப்பு மற்றும் பிறவற்றின் கீழ் வரையறுக்கப்பட்டுள்ள நுட்பமான தனிப்பட்ட தகவல்கள் உட்பட, நாங்கள் பயன்படுத்துவதற்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

## 1. தனிப்பட்ட தகவல்களைக் கட்டுப்படுத்துபவர்கள்

உங்களது தனிப்பட்ட தரவுகள்/தகவல்கள், பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துடன் சேர்ந்து அதன் தாய் நிறுவனத்தால் (அதன் பிரதிநிதிகள், துணை நிறுவனங்கள் மற்றும் அதன்

தொழிற்கூட்டாளிகள் உட்பட) சேகரிக்கப்பட்டு, இந்தியாவில் அமைந்துள்ள சர்வர்களில் சேமிக்கப்படும்.

## 2. உங்களைப் பற்றிய எந்தத் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் சேகரிப்போம்

வாடிக்கையாளர்களிடமிருந்து நாங்கள் அறிந்துகொள்ளும் தகவல்கள், இணையதளத்தில் உங்களுடைய அனுபவத்தைத் தனிப்பட்டதாக்கவும், தொடர்ந்து மேம்படுத்தவும் எங்களுக்கு உதவுகிறது.

- எங்கள் இணையதளத்தில், நீங்கள் தெரிவுசெய்த தயாரிப்பு அல்லது சேவையின்படியும், எங்களால் அல்லது எங்களது தொழிற்கூட்டாளிகளால் வேண்டப்பட்டு நீங்கள் உள்ளிடும் அல்லது பதிவேற்றம் செய்யும் ஏதாவது தகவல்கள் அல்லது ஆவணத்தை நாங்கள் பெற்று, சேமித்து வைப்போம், இவை உங்களுடைய முதற் பெயர், பெயர் இறுதி, மின்னஞ்சல் முகவரி, பிறந்த தேதி, வசிக்கும் நகரம் மற்றும் பிறவற்றை உள்ளடக்கும். குறிப்பிட்ட சில தகவல்களைத் தராமல் இருப்பதற்கு நீங்கள் தேர்வு செய்யலாம், ஆனால் எங்களுடைய பல சேவைகள் மற்றும் அம்சங்களின் அனுகூலத்தை உங்களால் அனுபவிக்க இயலாமல் போகலாம். உங்களுடைய பயோமெட்ரிக் தகவல்கஜ நாங்கள் சேகரிப்பதும் இல்லை, சேமிப்பதும் இல்லை.
- உங்களுடைய கேமிரா, மைக்ரோபோன், அமைவிடம் மற்றும் கைப்பேசி சாதனத்துக்கான ஒரு முறை அணுகுதலையும் நாங்கள் பெறுவதோடு, அத்தகைய தகவல்களை, எங்களுடைய அல்லது எங்கள் கூட்டாளியின் அறிமுகமாக்கல் அல்லது கேஒய்சி தேவைகளுக்காக மட்டுமே உங்களுடைய வெளிப்படையான ஒப்புதலுடன் சேகரித்து வைப்போம், இது ஆர்பிஐ-ஆல் வழங்கப்பட்டு அவ்வப்போது திருத்தப்படும் டிஜிட்டல் லென்டிங் வழிகாட்டுதல்களின்படி அமையும்.
- நாங்கள், உங்களைப் பற்றிய தகவல்களை பிற மூலங்களிலிருந்து பெற்று, எங்களுடைய கணக்குத் தகவல்களுடன் சேர்க்கக்கூடும்.

## 3. நாங்கள் குக்கீஸ்களை சேகரிப்போம்

நீங்கள் எப்பொழுது எங்களுடை தொடர்புகொண்டாலும் சில வகையான தகவல்களை நாங்கள் பெற்று, சேமிப்போம். உதாரணத்துக்கு, நாங்கள் “குக்கீஸ்” பயன்படுத்தி, உங்கள் இணைய உலாவி அந்த இணையதளத்தை அல்லது விளம்பரங்களை அல்லது அந்த இணையதளத்தால் அல்லது அதன்

சார்பாகப் பிற இணையதளங்களில் வழங்கப்படும் உள்ளடக்கங்களை அணுகும்போது நாங்கள் சில வகையான தகவல்களைப் பெறுவோம். ஒரு குக்கீ என்பது, பயனர் தொடர்பாக, பயனரின் கணிணியில் சேமிக்கப்பட்டுள்ள சிறிதளவு தரவாகும். நாங்கள் அமர்வு ஐடி குக்கீஸ் மற்றும் நிலையான குக்கீஸ் ஆகிய இரண்டையும் பயன்படுத்தக்கூடும். அமர்வு ஐடி குக்கீஸ் என்றால் நீங்கள் உங்களுடைய உலாவியை மூடிவிட்டால் அல்லது அமர்விலிருந்து வெளியேறினால் அந்தக் குக்கீ முடிவடைவதுடன், அழிக்கப்பட்டுவிடும். நிலைத்திருக்கும் குக்கீஸ் என்பது உங்கள் கணிணியின் வன் தட்டில், நீடித்த காலத்திற்கு சேமிக்கப்பட்டிருக்கும் ஒரு சிறிய உரைக்கோப்பு ஆகும். பயனர் ஒருவர் இணையதளத்தைப் பார்வையிடும் சமயத்தில் பயனரின் விருப்பங்களைத் தடமறிய அமர்வு ஐடி குக்கீஸ்களை Paisabazaar.com பயன்படுத்தக்கூடும். ஏற்றுவதற்கான நேரத்தைக் குறைக்கவும், சர்வர் செயலாக்கத்தைக் குறைப்பதற்கும் அவை உதவுகின்றன.

உங்களுடைய உலாவியானது புதிய குக்கீஸ்களை ஏற்பதிலிருந்து எவ்வாறு தடுப்பது, புதிய குக்கீ ஒன்றை நீங்கள் பெறும்போது அதை எவ்வாறு உலாவியானது அறிவிக்கச் செய்வது மற்றும் குக்கீஸ்களை ஒட்டுமொத்தமாக எவ்வாறு இயலாமல் செய்வது என்பதைப் பெரும்பாலான குக்கீஸ்கள் உங்களுக்குத் தெரிவிக்கும். கூடுதலாக, சேர்க்கைகளின் அமைப்புகள் அல்லது அதன் தயாரிப்பாளரின் இணையதளத்தைப் பார்வையிடுவதன் மூலம், ஃப்ளாஷ் குக்கீஸ் போன்ற உலாவிச் சேர்க்கைகளால் பயன்படுத்தப்படும் ஒத்த தரவுகளை முடக்க அல்லது அழிக்க முடியும்.

இருப்பினும், இணையதளத்தின் இன்றியமையாத சில அம்சங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கு, குக்கீஸ்கள் உங்களை அனுமதிப்பதால், அவற்றை இயக்கத்தில் விடுமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். உதாரணத்துக்கு, எங்களுடைய குக்கீஸ்களை நீங்கள் தடைசெய்தால் அல்லது வேறுவிதமாக நிராகரித்தால் நீங்கள் புகுபதிகை செய்யத் தேவைப்படும் எந்தவொரு இணையதள தயாரிப்புகள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு உங்களால் முடியாமல் போகலாம்.

### 4. இந்தத் தகவலை நாங்கள் எவ்வாறு பயன்படுத்துகிறோம்

நீங்கள் ஒரு கணக்கிற்காகப் பதிவு செய்யும் சமயத்தில், நீங்கள் அதன் தயாரிப்புகள் அல்லது சேவைகளைப் பயன்படுத்தும்போது, அதன் இணையதளத்தின் பக்கங்களுக்கு வருகைதரும் சமயத்தில் உங்கள் தகவல்களை Paisabazaar.com சேகரிக்கிறது. Paisabazaar.com-இல் நீங்கள் பதிவுசெய்யும் சமயத்தில் உங்கள் பெயரின் முதற் பெயர், பெயர் இறுதி,

மாநிலம் மற்றும் வசிக்கும் நகரம், மின்னஞ்சல் முகவரி, பிறந்த தேதி மற்றும் பாலினம் ஆகியவை உங்களிடம் கேட்கப்படும். நீங்கள் இணையதளத்தில் பதிவு செய்துவிட்டு, உள்நுழையும் போது நீங்கள் எங்களுக்கு அநாமதேயமானவர் அல்ல. மேலும், பதிவு செய்யும் சமயத்தில் உங்களுடைய தொடர்பு எண் உங்களிடம் கேட்கப்பட்டு, உங்களுடைய ஒயர்லெஸ் சாதனத்துக்கு SMS, அறிவிப்புகள் அனுப்பப்படலாம். எனவே, பதிவு செய்வதன் மூலம், நீங்கள் DND அல்லது DNC அல்லது NCPR ஆகியவற்றின் கீழ் உங்களை நீங்கள் பதிவு செய்திருந்தால்கூட, உங்களுடைய புகுபதிகை விவரங்களைக் கொண்டு உங்களுக்கு உரைகள் மற்றும் விளம்பர மின்னஞ்சல்கள் மற்றும் SMS உள்ளிட்ட உரைகள் மற்றும் மின்னஞ்சல் அறிவிப்புகளை உங்களுக்கு அனுப்புவதற்கு Paisabazaar.com (அதன் வணிகக் கூட்டாளிகள் மற்றும் துணை நிறுவங்கள் உட்பட) நிறுவனத்துக்கு நீங்கள் அதிகாரம் வழங்குகிறீர்கள். உங்கள் கணக்கு செயலிழக்கச் செய்யப்படாமல் இருப்பது அல்லது உங்கள் ஒப்புதலைத் திரும்பப்பெறாதவரை நீங்கள் அதிகாரம் வழங்கியது செல்லுபடியாகும். உங்களது ஒப்புதலின் அடிப்படையில், சேவை ஏதுவாக்கலுக்காகவும், நீங்கள் தெரிவு செய்த பல்வேறு சேவைகளுக்காக எங்கள் இணையதளத்தை அணுகுவதை எளிதாக்க மற்றும் பொருத்தமான சட்டங்களுடன் இணங்கும் விதமாகவும், கேமிரா உள்ளிட்ட உங்கள் கைப்பேசி சாதனத்தையும் பைசாபஜார் இணையதளம் அணுகலாம்.

**தகவல்களைச் சேகரிப்பதன் நோக்கம்:**

உங்களுக்கு சேவைகள் வழங்குவதை ஏதுவாக்கவும், வழங்கவும் எங்களுக்கு அல்லது எங்களது வணிகக் கூட்டாளிகளுக்கு உதவவும், பணம் செலுத்தல்கள் மற்றும் உங்கள் விண்ணப்பங்களை செயலாக்கம் செய்யவும், தயாரிப்புகள், சேவைகள் மற்றும் ஊக்குவிப்புச் சலுகைகளை உங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

உங்களது சந்தேகங்கள் அல்லது கோரிக்கைகளுக்குப் பதிலளிக்க, உங்களுக்கு வழங்கப்பட்ட ஏதாவது சேவைகள் குறித்த குறைகள்/சிக்கல்கள்/பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கு.

எங்களது வணிகக் கூட்டாளிகளுடனான ஏதாவது ஒப்பந்தம் தொடர்பாக எங்களை கடமைகளை நிறைவேற்றுவதற்கு அல்லது நிர்வகிப்பதற்கு.
சிறப்பு விற்பனைகள் அல்லது சலுகைகள் குறித்து உங்களுக்குத் தகவல் அனுப்புவதற்கு. புதிய அம்சங்கள் அல்லது தயாரிப்புகள்/சேவைகள் குறித்தும்

உங்களுக்கு நாங்கள் தெரிவிக்கக்கூடும். இவை நாங்கள் சுயமாக வழங்கும் சலுகைகள் அல்லது தயாரிப்புகள்/சேவைகளாக இருக்கலாம் அல்லது Paisabazaar.com உடன் இணைந்துள்ள ஒரு நிறுவனத்தின் மூன்றாம் தரப்பு சலுகைகள் அல்லது தயாரிப்புகள்/சேவைகளாக இருக்கலாம்.

உங்களுடைய தகவல்களை உட்புறப் பகுப்பாய்வுக்காகவும், விளம்பரப்படுத்தல், தேடல் முடிவுகள் மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட உள்ளடக்கம் போன்ற இருப்பிட அடிப்படையிலான சேவைகளை உங்களுக்கு வழங்கவும் உங்களுடைய தகவல்களைப் பயன்படுத்துவது.

எங்களுடைய இயங்குதளத்தை மேம்படுத்த, மோசடி அல்லது எங்களது இணையதளத்தின் தவறான பயன்பாட்டைக் கண்டறிய அல்லது தடுக்க மற்றும் எங்கள் சார்பாக மூன்றாம் தரப்பினர் தொழிநுட்பம், தளவாடம் அல்லது பிற செயல்பாடுகளை மூன்றாம் தரப்பினர் மேற்கொள்வதை இயலச் செய்வதற்காக இந்தத் தகவல்களைப் பயன்படுத்துவது. உங்களிடமிருந்து நாங்கள் பெறும் தகவல்களை, உங்களைப் பற்றி மூன்றாம் தரப்பிடமிருந்து நாங்கள் பெறும் தகவல்களுடன் ஒன்று சேர்க்கக்கூடும்.

எங்கள் பதிவேடுகளைப் புதுப்பிக்கவும், பொதுவாக எங்களிடம் உங்கள் கணக்குகளைப் பராமரிக்கவும், உள்ளடக்கம் மற்றும் வாடிக்கையாளர் கருத்தாய்வுகளைக் காட்டவும் உங்களுக்கு ஆர்வமூட்டக்கூடிய அறிவிப்புகள், தகவல்தொடர்புகள் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட சேவைகளை அனுப்புவதற்கு. நீங்கள் உங்களுடைய தொடர்பு விவரங்களை வழங்கும்போது, உங்களுடைய கணக்கு குறித்த பொதுவான அறிவிப்புகள் அல்லது முக்கியத் தகவல்களை அனுப்பவும், உங்களுடைய பின்னூட்டம் அல்லது கருத்துகளைக் கேட்பதற்கும், உங்களுக்கு விருப்பத்தை ஏற்படுத்தக்கூடிய சிறப்பு விற்பனைகள் அல்லது சலுகைகளை அனுப்புவதற்கும் நாங்கள் அதைப் பயன்படுத்துவோம்.

எங்களது கூட்டாளிகளால் வாடிக்கையாளர் விண்ணப்பங்களை செயலாக்கம் செய்யும் நோக்கத்திற்காக, வாடிக்கையாளர் ஆவணங்களைப் பதிவேற்றம் செய்வதற்காக ஆண்ட்ராய்டு/ iOS மற்றும் இணையதள அனுமதிகள் பெறப்படும்.

நீங்கள் தெரிவு செய்த பல்வேறு சேவைகளுக்காக எங்கள் இணையதளத்தை அணுகுவதை எளிதாக்க மற்றும் பொருத்தமான சட்டங்களுடன் இணங்கும்

விதமாகவும், கேமிரா உள்ளிட்ட உங்கள் கைப்பேசி சாதனத்தையும் உங்கள் ஒப்புதலின் அடிப்படையில் பைசாபஜார் இணையதளம் அணுகலாம். இந்தத் தனியுரிமைக் கொள்கையில் வேறுவிதமாக வழங்கப்பட்டவாறு மற்றும் பொருத்தமான சட்டங்களுடன் இணங்கும்விதமாகவும்

இந்த இணையதளத்தின் சில அம்சங்கள் அல்லது எங்கள் சேவைகள், எங்கள் இணையதளத்தில் உள்ள உங்கள் கணக்குப் பகுதியின்கீழ் நீங்கள் வழங்கியதைப் போல், தனிப்பட்டமுறையில் அடையாளம் காணத்தக்க தகவல்களை நீங்கள் வழங்கத் தேவைப்படலாம்.

### 5. மூன்றாம் தரப்பினருக்கு வெளிப்படுத்தல்

Paisabazaar.com இந்தத் தனியுரிமைக் கொள்கையில் வழங்கப்பட்டுள்ளவை, மற்றும்/அல்லது வேறு உறுதிப்பாடுகளுக்கு முரணான ஒரு விதத்தில் உங்கள் தகவல்களை வணிக ரீதியான நோக்கங்களுக்காக விற்காது, , வாடகைக்கு விடாது அல்லது வேறு விதமாக வெளிப்படுத்தாது. மேலே கூறப்பட்டதைக் கணக்கில்கொள்ளாமல், எங்களுடன் இணைந்துள்ள எங்கள் குழு நிறுவனம், பணியாளர்கள், முகவர்கள், தொழிற்கூட்டாளி (வங்கிகள்/என்பிஎ.ஃப்சி), சிஜசி, கட்டணம் திரட்டுபவர் மற்றும் சேவை வழங்குனர்கள் மற்றும் எங்களது ஏதாவது ஒரு துணை நிறுவனங்கள் உள்ளிட்ட மூன்றாம் தரப்பினருக்கு, இந்தத் தனியுரிமைக் கொள்கையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உங்கள் தகவல்களை நாங்கள் வழங்கக்கூடும்.

உங்களுடைய தகவல்களை இந்த மூன்றாம் தரப்பினர் பைசாபஜார் நிறுவனத்தால் பின்பற்றப்படும் அதே அளவு கவனம் மற்றும் இரகசியத்தன்மையைப் பயன்படுத்திக் கையாளவேண்டும் என்பதுடன், உங்கள் தகவல்களை இந்த மூன்றாம் தரப்பினர் ஏதாவது விதத்தில் அணுகுவது மற்றும் செயலாக்கம் செய்வது ஒப்பந்த நிபந்தனைகள், பொருந்தும் சட்டங்கள் மற்றும் எங்களது அறிவுறுத்தல்களின்படி இருக்கும் என்பதுடன், உங்களது ஒப்புதலுக்கு உட்பட்டது. இந்தப் பத்தியின் நோக்கங்களுக்காக, "துணை நிறுவனம்" என்பது எந்தவொரு நபர், அத்தகைய நபரை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கட்டுப்படுத்தும், அல்லது அவரால் கட்டுப்படுத்தப்படும், அல்லது அவருடன் பொதுவான கட்டுப்பாட்டில் இருக்கும் வேறு ஏதாவது நபர் எனப் பொருள்படும். ("கட்டுப்பாடு" என்ற சொல் ( "கட்டுப்படுத்தப்படும்" மற்றும் "பொதுவான கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும்" என்ற அதன் தொடர்புடைய பொருள் உள்பட) ஒரு நபரை அல்லது கொள்கைகளை வழிநடத்தலுக்கான அல்லது வழிநடத்தலுக்குக் காரணமான

அதிகாரத்தை, பங்கு உரிமை அல்லது கூட்டுப்பங்கு அல்லது ஒப்பந்தம் அல்லது வேறுவிதமான உரிமை நலன்கள் மூலம் கொண்டிருப்பது என்று பொருள்படும். "நபர்" என்னும் சொல் இயல்பான நபர், கழகம், கூட்டாண்மை, வரையறுக்கப்பட்ட பொறுப்பு நிறுவனம், அறக்கட்டளை, இணைக்கப்படாத சங்கம் அல்லது வேறு ஏதாவது நிறுவனத்தை உள்ளடக்குகிறது).

Paisabazaar.com நிறுவனத்தின் ஏதாவது ஒரு பகுதியை விற்பனை செய்தது அல்லது இணைப்பு, மீள்கட்டமைப்பு அல்லது அது எஞ்சியிருக்கும் நிறுவனம் இல்லை என்ற அடிப்படையில் அதை மற்றொரு நிறுவனத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகியவற்றின் விளைவாக இதன் மீது உரிமைகொண்டிருக்கக்கூடிய ஏதாவது வாரிசு ஆகியோருக்கு, உங்களுடைய தனிப்பட்ட முறையில் அடையாளம் காணத்தக்க தகவல்களை Paisabazaar.com பகிரலாம் மற்றும்/அல்லது இடமாற்றம் செய்யலாம்.

உங்களுடைய தனிப்பட்ட தகவல்களின் சேகரிப்பு மற்றுப் பயன்பாட்டை நாங்கள் கட்டுப்படுத்துகிறோம். நாங்கள், தனிப்பட்ட தகவல்களை அடையாளம் அழிப்போம் அல்லது ஒட்டுமொத்தமாக்கி, அவற்றைத் தனிப்பட்ட முறையில் அநாமதேயமான வகையில் மட்டுமே வெளிப்படுத்துவோம். அத்தகைய தகவல் உங்களைத் தனிப்பட்ட முறையில் அடையாளம் காட்டாது. உங்களுடைய கணக்குத் தகவல்கள் மற்றும் தனிப்பட்ட முறையில் அடையாளம் காட்டத்தக்க தகவல்களுக்கான அணுகுதல் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப்பட்டது என்பதுடன், எங்களது சேவைகளை இயக்குவதற்கு, உருவாக்க அல்லது மேம்படுத்துவதற்காக இந்தத் தனியுரிமைக் கொள்கையில் குறிப்பிட்டுள்ள நோக்கங்களுக்காகவும், குறிப்பிட்ட உட்புற நடைமுறைகளின்படியும் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. எங்களது சேவைகளை உங்களுக்கு வழங்குவதை இயலச்செய்வதற்காக நாங்கள் மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்களைப் பயன்படுத்தக்கூடும் என்பதுடன், அத்தகைய மூன்றாம் தரப்பினர், அவர்களுடனான எங்களது ஒப்பந்தத்தின் கீழ் அவர்களுக்கு வழங்கும் தகவல்களின் ரகசியத்தன்மையைப் பராமரிக்க வேண்டுகிறோம்.

சைபர் சம்பவங்கள், வழக்குத் தொடுத்தல் மற்றும் குற்றங்களுக்கான தண்டனை உள்பட, அடையாளம் சரிபார்த்தல் அல்லது தடுப்பு, கண்டறிதல், விசாரணை ஆகிய நோக்கங்களுக்காக அல்லது சட்டபூர்வ கடமையுடன் இணங்குவதற்காக வெளிப்படுத்தல் தேவைப்படும் இடத்தில், சட்டப்படி கட்டாயமாக்கப்பட்டுள்ள அரசாங்க முகமைகளுடன் உங்களுடைய முன்கூட்டிய எழுத்துப்பூர்வ ஒப்புதல் இல்லாமலும் உங்கள் தகவல்களை

நாங்கள் பகிர்ந்துகொள்ளக்கூடும். பொருத்தமான சட்டத்தின்கீழ் தேவைப்பட்டால், இந்த இணையதளம் உங்களுடைய தகவல்களை வெளிப்படுத்துவதை நீங்கள் ஏற்றுக்கொண்டு, ஒப்புதலளிக்கிறீர்கள்.

கடன்கள், கிரெடிட் அட்டைகள், பரஸ்பர நிதிகள் போன்று இணையதளத்தில் கடன் வழங்குனர்கள், வங்கிகள், கிரெடிட் அட்டை வழங்குனர்கள் போன்ற மூன்றாம் தரப்பினரால் வழங்கப்படும் பொருட்கள்/சேவைகள் பல உள்ளன. இந்தத் தனிப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கு விண்ணப்பிக்கத் தேர்வு செய்து, இவர்களுக்குத் தகவல்களை வழங்கினால், அவர்கள் உங்களது தகவல்களைப் பயன்படுத்துவது அவர்களது தனியுரிமைக் கொள்கைகளுடன் கூடுதலாக இணையதளத்தின் தனியுரிமைக் கொள்கையாலும் கட்டுப்படுத்தப்படும். அவர்களது தனியுரிமைக் கொள்கைகளுக்கு Paisabazaar.com பொறுப்பாகாது. நீங்கள் அவர்களது பொருட்கள் அல்லது சேவைகளுக்கு விண்ணப்பிக்கும் போது, அந்த மூன்றாம் தரப்பினர்/வழங்குனர்கள் பின்பற்றும் தனியுரிமை அறிவிப்புகள் மற்றும் நடைமுறைகளை, சென்று, படித்துப் பார்க்குமாறு நாங்கள் ஊக்குவிக்கிறோம். இத்தகைய மூன்றாம் தரப்பு இணையதளங்களின் தனியுரிமைக் கொள்கைகள் அல்லது பயன்பாட்டுக்கான விதிமுறைகளின் உள்ளடக்கத்துக்கு பைசாபஜார் எவ்விதத்திலும் பொறுப்பாகாது.

எங்களது கைப்பேசி செயலி மூலம் எங்களது பரஸ்பர நிதியில் நீங்கள் முதலீடு செய்தால், பின்வரும் வெளிப்படுத்தலுக்கு நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்:

-

கூகுள் ஏபிஜ-களிலிருந்து பெறப்படும் தகவல்களை பைசாபஜார் பயன்படுத்துவது மற்றும் வேறு ஏதாவது செயலிக்கு இடமாற்றம் செய்வதில், வரையறுக்கப்பட்ட பயன்பாட்டுத் தேவைகள் உட்பட கூகுள் ஏபிஜ சேவைகள் பயனர் தரவுக் கொள்கை கடைபிடிக்கப்படும். நீண்டகாலமாக, பல வழிகள்/இயங்குதளங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்ட பரஸ்பர நிதி முதலீடுகளின் செயல்பாட்டின் தடமறிவதற்கு பைசாபஜார் செயலி உதவுகிறது, மற்றபடி அது வாடிக்கையாளர்களுக்கு சிரமமானதாக இருக்கும். இந்த இடத்தில், வாடிக்கையாளரின் அடிப்படைத் தேவை என்பது பரஸ்பர நிதி முதலீடுகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பார்த்து, கண்காணிக்க இயலவேண்டும் என்பதாகவே இருக்கும். வாடிக்கையாளரின் ஒப்புதலுக்குப்

பிறகு, இதை வழங்க முடிவதற்காக, பைசாபஜார் இணையதளமானது, ஒவ்வொரு மாதமும் முதலீட்டாளர்/வாடிக்கையாளர் பெறும் பரஸ்பர நிதி சிஏஎஸ் மின்னஞ்சல் அறிக்கையை (அது அனைத்து பரஸ்பர நிதி முதலீடுகளின் விவரங்களை உள்ளடக்கியது) மட்டும் படித்து, ஒரே திரையில் முழுமையான மற்றும் விரிவான பரஸ்பர நிதி டேஷ்போர்டை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இது வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட அனுபவத்தை வழங்குவதுடன், ஒரே இடத்தில் அனைத்து பரஸ்பர நிதி முதலீடுகளையும் ஒரே இடத்தில், சரிபார்க்க, கண்காணிக்க மற்றும் ஒப்பிட்டுப்பார்க்க அவர்களுக்கு உதவி, நிதிசார்ந்து, தகவலறிந்த முடிவுகளை எடுப்பதற்கு அவர்களுக்கு உதவுகிறது.

**6. தரவு சேமிப்பு**

-

இந்தியாவில் உள்ள சர்வர்களில் மட்டுமே பைசா பஜார் உங்களது தனிப்பட்ட தகவல்களைச் சேமிக்கிறது. நீங்கள் விசாரித்த அல்லது தெரிவு செய்த ஒரு பொருளுக்கான சேவையை உங்களுக்கு வழங்குவதற்கு அது தேவைப்படலாம் என்பதால் தனிப்பட்ட தகவல்கள் உள்ளிட்ட உங்களது தகவல்களை, மேற்கண்ட நோக்கத்துக்காகத் தேவைப்படும் வரை அல்லது எங்களது தொழிற்கூட்டாளிகளுடனான எங்களது ஏற்பாடுகளில் ஆணையிடப்பட்டிருக்கும் வரை உங்களது தகவல்களை பைசா பஜார் தக்கவைக்கக்கூடும், தகவல்களைத் தக்கவைப்பது இந்தக் கொள்கையின்படி, இந்தியாவிலுள்ள பொருத்தமான சட்டம்/ஒழுங்குமுறைத் தேவைகளுடன் இணங்குவதற்கு உட்பட்டு மேற்கொள்ளப்படும்.

பின்வரும் சூழ்நிலையில், பைசாபஜார் உங்கள் தகவல்களை நீடித்த காலத்துக்குத் தக்கவைக்கலாம் (i) சட்டப்படி ஏதாவது விசாரணைகளுக்குத் தேவைப்பட்டால் அல்லது நீதிமன்றம்/தீர்ப்பாயம்/அமைப்புகள்/ஆணையங்களுக்கு முன் ஏதாவது தேவைகளின் ஒரு பகுதியாக (ii) எங்களது பொருட்கள்/சேவைகளை மேம்படுத்த/செம்மைப்படுத்த (iii) தொழிற்கூட்டாளிகளுடனான ஒப்பந்த ஏற்பாடுகளின் கீழ் தேவைப்பட்டால்.

**7. சேகரிக்கப்பட்டு, ஆன்லைனில் பயன்படுத்தப்படும் தனிப்பட்ட தகவல்கள் மீது உங்களுக்கு என்ன கட்டுப்பாடு இருக்கும்**

உங்களைப் பற்றி நாங்கள் பயன்படுத்தும் தகவல்கள், உங்களுக்குப் பயனுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் அனுபவங்களை உங்களுக்கு வழங்க எங்களுக்கு உதவுகிறது என்பதைக் கவனத்தில்கொள்வது முக்கியம். உங்களைப் பற்றிய தனிப்பட்ட முறையில் அல்லாத தகவல்கள் எவ்வாறு சேகரிக்கப்படுகிறது மற்றும் ஆன்லைனில் பயன்படுத்தப்படுகிறது என்பதைக் கட்டுப்படுத்தும் திறன் உங்களுக்கு உண்டு

நீங்கள் எந்த நுட்பமான தகவல்கள் (அதாவது உங்களுடைய நிதிசார்ந்த தகவல்கள்) உள்பட, எந்தத் தனிப்பட்ட தகவல்களை நீங்கள் எங்களுக்கு வழங்குகிறீர்கள் என்பதையும், மூன்றாம் தரப்பினருக்கு உங்கள் தகவல்களை வெளிப்படுத்துவதைக் கட்டுப்படுத்தும் திறன் உங்களுக்கு உண்டு, இருப்பினும், இது நீங்கள் தெரிவு செய்தவாறு, அத்தகைய பொருள்/சேவைக்கான உங்களது தடையற்ற அணுகுதலை இது பாதிக்கலாம் என்பதைத் தயவுசெய்து கருத்தில்கொள்ளவும். இருப்பினும், உங்களிடமிருந்து கோரப்பட்ட கட்டாயமான தகவல்கள் அனைத்தும் வழங்காதிருக்க நீங்கள் தேர்வு செய்தால், நீங்கள் குழுசேர்ந்த அனைத்துச் சேவைகளையும் நாங்கள் உங்களுக்கு வழங்க இயலாமல் போகக்கூடும்.
மின்னஞ்சல்/ SMS வழியே நீங்கள் எவ்விதமான தகவலைப் பெற விரும்புகிறீர்கள் என்பதை உங்களால் தேர்வு செய்ய முடியும் என நாங்கள் நம்புகிறோம். மின்னஞ்சல்/ SMS வழியே விளம்பரங்களைப் பெறுவதை நீங்கள் விரும்பவில்லை என்றால், உங்கள் கணக்குக்கான தொடர்புத் தகவலில் உங்கள் விருப்பத்தைக் குறிப்பிட்டால் போதுமானது அல்லது சந்தைப்படுத்தல் மின்னஞ்சல்களில் வழங்கப்பட்டுள்ள 'வெளியேறத் தேர்வு செய்க' அல்லது குழுவிலகல் இணைப்பு மூலம் தெரியப்படுத்தலாம் என்பதுடன் care@paisabazaar.com என்ற மின்னஞ்சல் முகவரியிலும் எங்களைத் தொடர்புகொள்ள இயலும். உங்களது கோரிக்கையை செயலாக்கம் செய்வதற்கு சுமார் 10 நாட்கள் ஆகலாம் என்பதைத் தயவுசெய்து கவனத்தில்கொள்ளவும். நீங்கள் வெளியேறத் தேர்வு செய்த பிறகும்கூட, எங்களுடனான உங்கள் சேவைகள் தொடர்பாக மின்னஞ்சல்/SMS/தொலைபேசி வழி அழைப்புகளை வழியே உங்களுக்குத் தொடர்ந்து அறிவிப்புகளை வழங்குவோம் என்பதைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

இணைய தளத்தில் உங்கள் கணக்கில் உள் நுழைவது மூலம் நீங்கள் எங்களுக்கு வழங்கியுள்ள தகவல்களை மீளாய்வு செய்து, நீங்கள் எங்களுக்கு வழங்கிய தகவல்கள் அல்லது தரவுகள் துல்லியமாகவும், முழுமையாகவும் இருக்கிறது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, ஏதாவது தனிப்பட்ட தகவல்களை அல்லது நுட்பமான தனிப்பட்ட தரவுகள் அல்லது தகவல்களைச்

சரிசெய்யலாம் அல்லது திருத்தலாம். Paisabazaar.com நிறுவனத்துக்கு உங்களால் அல்லது ஏதாவது மூன்றாம் தரப்பினரால் வழங்கப்பட்ட ஏதாவது தனிப்பட்ட தகவல்கள் அல்லது நுட்பமான தரவுகள் அல்லது தகவல்களுக்கு அந்த நிறுவனம் பொறுப்பாகாது.

## 8. ஒப்புதலை திரும்பப் பெறுதல்

-

உங்களது தனிப்பட்ட தகவல்களைத் தக்கவைத்திருப்பது எங்களுக்குத் தேவையில்லை என்று நாங்கள் நினைத்தால் அல்லது உங்களது தனிப்பட்ட தரவுகளைச் செயலாக்கம் செய்வதற்கான உரிமை எங்களுக்கு இல்லை என்று நீங்கள் கருதும் இடத்தில் அவற்றை நீக்குமாறு அல்லது அகற்றுமாறு நீங்கள் எங்களிடம் கோரினால், அத்தகைய வாடிக்கையாளர் தகவலை நாங்கள் அழித்துவிடுவோம் அல்லது நீக்கிவிடுவோம். consentrevocation@paisabazaar.com. என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களுக்கு எழுதுவதன் மூலம், நீங்கள் எங்களுடைய சேவைகளைப் பெறும் சமயத்தில் அல்லது வேறு சமயத்தில் எப்பொழுது வேண்டுமானாலும், உங்களுடைய நுட்பமான தனிப்பட்ட தரவுகள் அல்லது தகவல்களைச் சேகரிப்பதற்கும், பயன்படுத்துவதற்கும், நீங்கள் முன்னதாக எங்களுக்கு வழங்கிய ஒப்புதலைத் திரும்பப் பெறலாம். இருப்பினும், நீங்கள் அத்தகைய ஒப்புதலைத் திரும்பப்பெற்றால், தகவல்கள் கோரப்பட்ட சேவைகளை நிறுத்தும் தெரிவு Paisabazaar.com நிறுவனத்துக்கு இருக்கும். அத்தகைய நிகழ்வில் ஏதாவது சேவைக்காக நீங்கள் ஏதாவது கட்டணம் செலுத்தியிருந்தால் அதைத் திரும்பப் பெறுவதற்கு உங்களுக்குத் தகுதி இருக்காது என்பதுடன், அதை எவ்வித்திலும் திருப்பித் தரும் பொறுப்பு இணையதளத்துக்கு இல்லை என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள்.

நாங்கள் மற்றும்/அல்லது எங்களது கூட்டாளிகள் தயாரிப்புக்கான சேவை வழங்குதல், திருப்பிச் செலுத்துதல் மற்றும் பிற நோக்கங்களுக்காகவும், பொருத்தமான ஏதாவது சட்டங்களின்கீழ் தேவைப்படுமாறும் இந்தத் தரவுகளைத் தக்கவைக்கத் தேவைப்படலாம். தக்கவைக்கப்படும் அத்தகைய தகவல்கள் அனைத்து சைபர் பாதுகாப்பு விதிமுறைகளையும் பின்பற்றிப் பாதுகாக்கப்படும் என்று நாங்கள் உறுதியளிக்கிறோம்.

## 9. பதிவுக் கோப்புகள்

-

பெரும்பாலான திட்டமான இணையதளங்களைப் போல், நாங்கள் பதிவுக் கோப்புகளைப் பயன்படுத்துகிறோம். இந்தத் தகவல்கள் இணைய நெறிமுறை (ஐபி) முகவரிகள், உலாவி வகை, இணையதள சேவை வழங்குனர் (ஐஎஸ்பி), பரிந்துரைக்கும்/வெளியேறும் பக்கங்கள், இயங்குதள வகை, தேதி/நேர முத்திரை மற்றும் போக்குகளை ஆய்வு செய்வதற்கு, தளத்தை நிர்வகிப்பதற்கு, மொத்தத்தில் பயனரின் இயக்கத்தைத் தடமறிவதற்கு மற்றும் ஒட்டுமொத்தப் பயன்பாட்டுக்காகப் பரந்த மக்கள்தொகைசார் தகவல்களைச் சேகரிப்பது ஆகியவற்றுக்காக க்ளிக்குகளின் எண்ணிக்கை ஆகியவற்றை உள்ளடக்கலாம். இவ்வாறு தானாக சேகரிக்கப்பட்ட பதிவுத் தகவல்களை, உங்களைப் பற்றி நாங்கள் சேகரித்த தகவல்களுடன் நாங்கள் இணைக்கலாம். உங்களுக்கு நாங்கள் வழங்கும் சேவைகளை மேம்படுத்தவும், சந்தைப்படுத்தல், பகுப்பாய்வு அல்லது தளத்தின் இயங்குதன்மையை மேம்படுத்தவும் நாங்கள் இதைச் செய்கிறோம்.

### 10. தரவுப் பாதுகாப்பு

-

Paisabazaar.com ISO/IEC 27001:2013 சான்றளிக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும், இது தகவல் பாதுகாப்பு குறித்து, பொருந்தும் இணக்கத் தரங்களை உறுதிப்படுத்துவதுடன், உங்களது தகவல்களின் இரகசியத்தன்மை, கட்டுறுதி மற்றும் கிடைக்கும் தன்மை ஆகியவை எங்களது வணிகச் செயல்பாடுகள் மற்றும் எங்களது சொந்த வெற்றி ஆகியவற்றுக்கு முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டுள்ளது. உங்களிடமிருந்து நாங்கள் சேகரிக்கும் தகவல்களைப் பாதுகாப்பதற்காக நாங்கள் எல்லா நேரங்களிலும் பொருத்தமான தொழில்நுட்ப மற்றும் அமைப்பு ரீதியான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் செயல்படுத்துகிறோம். தரவுப் பாதுகாப்பு மீறல் என்ற ஏதாவது சந்தேகம் குறித்து சமாளிப்பதற்கான பொருத்தமான பாதுகாப்பு நடவடிக்கைகளை நாங்கள் வைத்துள்ளோம். இருப்பினும், எவ்விதமான இணையவழிப் பரிமாற்ற முறை அல்லது மின்னணு சேமிப்பு முறையும் 100% பாதுகாப்பனது இல்லை. எனவே அதன் முழுமையான பாதுகாப்புக்கு நாங்கள் உத்தரவாதமளிக்க முடியாது. அதுமட்டுமல்லாமல், உங்களது புகுபதிகை அடையாளக் குறியீடு மற்றும் கடவுச்சொல்லின் இரகசியத்தன்மை மற்றும் பாதுகாப்பைப் பேணுவதற்கு நீங்களே பொறுப்பு என்பதுடன், இந்தச் சான்றுகளை மூன்றாம் தரப்பினர் யாருக்கும் வழங்கக்கூடாது.

### 11. மூன்றாம் தரப்பு விளம்பரதாரர்கள் மற்றும் பிற இணைய தளங்களுக்கான இணைப்புகள்

-

**மூன்றாம் தரப்பு விளம்பரம்**

நீங்கள் எங்கள் இணையதளத்தைப் பார்வையிடும்போது விளம்பரங்களைக் காட்டுவதற்கு நாங்கள் மூன்றாம் தரப்பு விளம்பர நிறுவனங்கள் மற்றும்/அல்லது விளம்பர முகமைகளை நாங்கள் பயன்படுத்தக்கூடும். உங்களுக்கு ஆர்வத்தை ஏற்படுத்தக்கூடிய சரக்குகள் மற்றும் சேவைகள் குறித்து இந்த இணையதளத்திலும், பிற மூன்றாம் தரப்பு இணையதளங்களிலும் விளம்பரங்களை வழங்குவதற்காக, இந்த இணைய தளத்துக்கு உங்களது வருகைகள் குறித்த தகவல்களையும் இந்த நிறுவனங்கள் பயன்படுத்தக்கூடும்.

எங்கள் சார்பாக இணையதளம் முழுவதிலும், சில சமயங்களில் இந்த இணையதளத்திலும் விளம்பரங்களை வழங்குவதற்காக நாங்கள் மூன்றாம் தரப்பு சேவை வழங்குனர்களை நாங்கள் பயன்படுத்துகிறோம். இணையதளத்துக்கு உங்கள் வருகை மற்றும் எங்களது தயாரிப்புகள் மற்றும் சேவைகளுடன் எங்களது இடைவினை குறித்து அநாமதேயமான தகவல்களை அவர்கள் சேகரிக்கக்கூடும். பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக இலக்குவைக்கப்பட்ட விளம்பரங்களுக்காக இந்த இணையதளம் மற்றும் பிற இணையதளங்களுக்கு உங்கள் வருகைகள் குறித்த தகவல்களையும் அவர்கள் பயன்படுத்தக்கூடும். இந்த அநாமதேயமான தகவல்கள் ஒரு பிக்ஸல் டேக் பயன்பாட்டின் மூலம் சேகரிக்கப்படுகிறது, அது பெரும்பாலான பெரிய இணையதளங்களால் பயன்படுத்தப்படும் தொழில்துறையின் தரநிலையான தொழில்நுட்பமாகும். இந்தச் செயல்முறையில், தனிப்பட்ட முறையில் அடையாளம் காணத்தக்க தகவல்கள் எதுவும் சேகரிக்கப்படாது அல்லது பயன்படுத்தப்படாது

**பிற இணையதளங்களுக்கான இணைப்புகள்:**

Paisabazaar.com மற்றும் பிற துணை நிறுவனங்களுடன் தொடர்புள்ள எங்களது வங்கிசார்ந்த மற்றும் வங்கி சாராத கூட்டாளிகள் தொடர்பான பிற தளங்கள் இருக்கலாம். இந்தத் தளங்களுக்கு நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தகவல்கள் எங்களது சொத்தோ, எங்களுக்குப் பொறுப்புடையதாகவோ ஆகாது. இந்த இணைக்கப்பட்ட தளங்கள் வேறுபட்ட தனியுரிமை வழக்கங்களைக் கொண்டிருக்கலாம், நீங்கள் இவற்றுக்கு வருகைதரும் சமயத்தில், அவற்றின் தனியுரிமைக் கொள்கைகளைப் படிக்குமாரு நாங்கள் உங்களுக்கு வலியுறுத்துகிறோம். இந்த மூன்றாம் தரப்பு இணையதளங்களின் உள்ளடக்கம் அல்லது பயன்பாட்டுக்கான விதிமுறைகள் குறித்து பைசாபஜார் எவ்விதமான பொறுப்பையும் கொண்டிருக்காது.

## 12. இந்தத் தனியுரிமைக் கொள்கையில் மாற்றங்கள்

-

தனது தனிப்பட்ட விருப்புரிமையின்படி, இந்தக் கொள்கையை அவ்வப்போது மாற்றும் உரிமை Paisabazaar.com நிறுவனத்துக்கு இருக்கிறது. எங்களது தகவல் நடைமுறைகளில் மாற்றங்களைக் காட்டும்விதமாக நாங்கள் இந்தத் தனியுரிமைக் கொள்கையைப் புதுப்பிக்கலாம். அவ்வப்போது மீளாய்வு செய்யுமாறு நாங்கள் உங்களுக்கு வலியுறுத்துகிறோம். கீழே கொடுக்கப்பட்டுள்ள செயலுக்கு வரும் நாளைச் சரிபார்ப்பது, நீங்கள் கடைசியாக மீளாய்வு செய்தபிறகு ஏதாவது மாற்றங்கள் இருக்கிறதா என்பதை நீங்கள் தீர்மானிக்க உதவுகிறது.

## 13. ஒருங்கிணைப்பு குறைதீர்ப்பு அலுவலர்

-

எந்தவொரு டிஜிட்டல் கடன் தொடர்பான புகார்கள் தொடர்பான வாடிக்கையாளர்களின் குறைகளைக் களைவதற்காக ஒரு ஒருங்கிணைப்பு குறைதீர் அலுவலரை இந்த நிறுவனம் நியமித்துள்ளது. இணைப்புக் குறைதீர் அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

**பெயர்**: திருமிகு.ஜோத்ஸ்னா பாப்ளி
**முகவரி**: பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண்.135, செக்டார்-44, குருகிராம்-122001, ஹரியானா
**மின்னஞ்சல்**: servicehead@paisabazaar.com

எங்களது தனியுரிமைக் கொள்கை தொடர்பாகக் கேள்விகள், கவலைகள் அல்லது ஆலோசனைகள் உங்களுக்கு இருந்தால், எங்களைத் தொடர்புகொள்க பக்கத்தில் உள்ள தொடர்புத் தகவல்களைப் பயன்படுத்தி அல்லது care@paisabazaar.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ள முடியும்

## 14. தரவு குறைதீர்ப்பு அலுவலர்

-

ஒருவேளை உங்களுக்கு ஏதாவது குறைகள் இருந்தாலோ, Paisabazaar.com நிறுவனத்துக்கு நீங்கள் வழங்கிய ஏதாவது தகவல்கள்/தரவு ஆகியவற்றின் செயலாக்கம் தொடர்பாக உங்களுக்கு இருக்கும் ஏதாவது வேறுபாடுகளைச் சரிசெய்ய வேண்டும் என்றாலோ, தயவுசெய்து எங்களது தரவு குறைதீர்ப்பு அலுவலரைத் தொடர்புகொள்ளவும். குறைதீர்ப்பு அலுவலரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது:

**பெயர்**: திரு.முகேஷ் ஷர்மா
**பதவி**: இயக்குனர் - தொழில்நுட்பம் & அபிவிருத்தி
**முகவரி**: பைசாபஜார் மார்க்கெடிங் அண்டு கன்சல்டிங் பிரைவேட் லிமிடெட், பிளாட் எண்.135, செக்டார்-44, குருகிராம்-122001, ஹரியானா
**தொலைபேசி**: 0124 - 4562900
**தொலைநகலி**: 0124 - 4562902
**மின்னஞ்சல்**: grievance-officer@paisabazaar.com

எங்களது தனியுரிமைக் கொள்கை தொடர்பாகக் கேள்விகள், கவலைகள் அல்லது ஆலோசனைகள் உங்களுக்கு இருந்தால், எங்களைத் தொடர்புகொள்க பக்கத்தில் உள்ள தொடர்புத் தகவல்களைப் பயன்படுத்தி அல்லது care@paisabazaar.com என்ற மின்னஞ்சல் முகவரியில் எங்களைத் தொடர்புகொள்ள முடியும்

**இந்தத் தனியுரிமைக் கொள்கை கடைசியாக மேற்சேர்க்கை செய்யப்பட்ட தேதி: 03 அக்டோபர் 2022**